## மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம் (முதன்மை மாவட்ட நீதிமன்றம்), திண்டுக்கல்

**முன்னிலை:–திருமதி ஆ.முத்துசாரதா, பி.எல்., பி.ஜி.டி.பி.எம்.,**
**முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்.**

2024–ஆம் ஆண்டு ஜீலைத் திங்கள் 16 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**மோ.வா.வி.இ.கோ. மனு எண்.524/2022**

**C.N.R. No.TND01-001586-2022**

1. திருமதி. P. மல்லிகா, க/பெ.லேட். P. பிரபு, இந்து, வயது சுமார் 31, குடியிருப்பு முகவரி, 5/164, கீழத்தெரு, P. தேத்தம்பட்டி, பரளி புதூர், திண்டுக்கல் மாவட்டம் – 624 401

2. இளவர். P. தாரிகா த/பெ.லேட்.P. பிரபு, இந்து, வயது சுமார் 2, குடியிருப்பு முகவரி, 5/164, கீழத்தெரு, P. தேத்தம்பட்டி, பரளி புதூர், திண்டுக்கல் மாவட்டம் – 624401

3. இளவர். P. தீக்ஷா, த/பெ.P. லேட்.பிரபு, இந்து, வயது சுமார் 1, குடியிருப்பு முகவரி, 5/164, கீழத்தெரு, P. தேத்தம்பட்டி, பரளி புதூர், திண்டுக்கல் மாவட்டம் – 624 401

4. திருமதி. P. லட்சுமி, க/பெ. T. பழனி, இந்து, வயது சுமார் 52, குடியிருப்பு முகவரி, 5/135, கோமனம்பட்டி, சாத்தாம்பாடி அஞ்சல், நத்தம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம் – 624 401.

5. திரு. T. பழனி த/பெ. தொத்தன் இந்து, வயது சுமார் 55, குடியிருப்பு முகவரி, 5/135, கோமனம்பட்டி, சாத்தாம்பாடி அஞ்சல், நத்தம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம் – 624 401.

(2 மற்றும் 3ம் இளவர் மனுதாரர்கள் தங்களது தாயாரும், பாதுகாவலருமான 1ம் மனுதாரர் திருமதி. மல்லிகா மூலமாக)

.... மனுதாரர்கள்

//எதிராக//

1. திரு. N. சக்திவேல் த/பெ. நல்லையா, குடியிருப்பு முகவரி w1/194, w1/212, உலுப்பக்குடி, புண்ணப்பட்டி, நத்தம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம் – 624 401.

2. திரு. V. சாமிக்கண்ணு, த/பெ. விஜயன் குடியிருப்பு முகவரி உலுப்பக்குடி, புண்ணப்பட்டி, நத்தம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

.. எதிர்மனுதாரர்கள்

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்னர் 03.07.2024 ம் தேதியன்று வாய்தாவிற்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் P. ராஜாரவிகுமார் மற்றும் என். செல்வமணி ஆகியோர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் அழைத்தும் ஆஜராகததால் தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டு மனுதாரர்கள் தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இதுநாள் வரையில் இந்நீதிமன்ற ஆய்விற்கு உட்பட்டிருந்து, இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பகரும்,

**<u>உத்தரவு</u>**

கடந்த 22.11.2020 ம் தேதியன்று ஏற்பட்ட சாலை விபத்தின் காரணமாக இறந்துபோன பிரபுவின் வாரிசுதாரர்களுக்கு நஷ்ட ஈடாக ரூ.30,00,000/– வழங்க கோரி மோட்டார் வாகன சட்டப் பிரிவுகள் 140, 166 படியும் மற்றும் வாகன நஷ்டஈடு கோரும் உரிமை தீர்வாயம் 1988 படியும் தாக்கல் செய்யப்பட்ட மனு.

2. **<u>மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம் :</u>**

கடந்த 22.11.2020 ம் தேதி சுமார் 07.30 மணியளவில் இவ்வழக்குச் சம்பத்தில் இறந்துபோன பிரபு தனக்கு சொந்தமான T.N.59 BS 7639 என்ற

பதிவெண் கொண்ட ஸ்பிளண்டர் இருசக்கர வாகனத்தை நத்தம் to மதுரை செல்லும் சாலையில் அசேபா பால் பண்ணை அருகில் ஒட்டி வரும்போது, எதிர்திசையில் TN 57 AJ 5277 என்ற பதிவெண்கொண்ட 1ம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட மகேந்திர டிராக்டரை 2ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மேற்படி பிரபு ஓட்டி வந்த பைக்கில் மோதியதில் அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டு, முதுலுதவிக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சேர்த்ததில் பிரபு கடந்த 26.11.2020ம் தேதி இறந்துவிட்டார். இந்த விபத்து குறித்து 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரான 2ம் எதிர்மனுதாரரின் மீது நாகமலை புதுக்கோட்டை காவல் நிலையத்தில் கு.எண்–922/2020ல், குற்றப் பிரிவுகள் 279, 337 மற்றும் 304(A) இ.த.சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்தின் போது இறந்து போன பிரபுவின் வயது 32. விபத்திற்கு முன்பு அவர் கூலி வேலை செய்து தினமும் ரூ.700/– சம்பாதித்து வந்தார். 1ம் மனுதாரர் இறந்துபோன பிரபுவின் மனைவி, 2,3 மனுதாரர்கள் முறையே இறந்துபோனவரின் மக்கள், 3 மற்றும் 4 மனுதாரர்கள் முறையே இறந்துபோனவரின் தாய் மற்றும் தந்தை. விபத்திற்கு முன்பு மனுதாரர்கள் இறந்துபோன பிரபுவின் வருமானத்தையே நம்பியிருந்ததால் தற்போது இறப்பிற்கு பின் மனுதாரர்கள் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார்கள். 2ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவினாலேயே இவ்விபத்து நிகழ்ந்துள்ளது. ஆகவே,

எதிர்மனுதாரர்கள் தனித்தோ சேர்ந்தோ மனுதாரர்களுக்கு ரூ.30,00,000/- நஷ்ட ஈடு வழங்க கடமைப்பட்டவர்கள் ஆவார்.

**3)** எதிர்மனுதாரர்கள் அழைக்கப்பட்டும் ஆஜரில்லாததால் தோன்றாத் தரப்பினர்களாகக் கருதப்பட்டுள்ளனர் .

4) **<u>இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினைகள் பின்வருமாறு:</u>**

1. விபத்து யாருடைய தவறுகையின் காரணமாக ஏற்பட்டுள்ளது ?
2. மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் யார் ?
3. மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்க பரிகாரங்கள் யாவை ?

5) மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1 மற்றும் ம.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் முன்னிடப்படவில்லை.

6) **<u>பிரச்சனை எண் 1-க்கான தீர்வு -</u>**

1ம் மனுதாரர் மல்லிகா தன்னை ம.சா.1 ஆக விசாரித்துக்கொண்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். இதில் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை நகலாகவும், ம.சா.ஆ.2 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை நகலாகவும், ம.சா.ஆ.3 இறந்துபோன பிரபுவின் இறப்பு சான்றிதழ் நகலாகவும், ம.சா.ஆ.4 இறந்துபோன பிரபுவின் வாரிசு சான்றிதழ் நகலாகவும், ம.சா.ஆ.5 இறந்துபோன பிரபுவின் பிரேத பரிசோதனை அறிக்கை நகலாகவும், ம.சா.ஆ.6 மனுதாரர்களின் ஆதார் அட்டை நகலாகவும், ம.சா.ஆ.8

மனுதாரர்களின் வாரிசு சான்றிதழ் நகலாகவும் குறியீடு செய்துகொண்டு அவர் தனது சாட்சியத்தில் தனது கணவர் பிரபு கடந்த 22.11.2020ம் தேதி இரவு சுமார் 7.30 மணியளவில் அவர்களது நண்பர்கள் ஜனகர் மற்றும் புகழ் ஆகிய மூன்று பேரும் சேர்ந்து T.N.59 BS 7639 என்ற பதிவெண் கொண்ட ஸ்பிளண்டர் பைக்கில் நத்தம் வரும்போது தனது கணவர் பைக்கை ஓட்டியதாகவும், பைக் நத்தம் to மதுரை செல்லும் சாலையில் அசேபா பால் பண்ணை அருகில் வரும்போது, உலுப்பகுடியைச் சேர்ந்த விஜயன் மகன் சாமிக்கண்ணு என்பவர் TN 57 AJ 5277 என்ற பதிவெண் கொண்ட மகேந்திரா டிராக்டரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து தனது கணவர் ஓட்டி வந்த பைக்கில் டிராக்டரின் கொழு மோதியதில் அதே இடத்தில் மூவரும் விழுந்துவிட்டார்கள் என்றும், தனது கணவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டு, மண்டை பகுதியில் காது, மூக்கில் இருந்து ரத்தம் கொட்டியது என்றும், ஜனகர் என்பவருக்கு வலது கை, வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றும், மூவரையும் முதல் உதவிக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சேர்த்து, தனது கணவர் சிகிச்சை பலனின்றி 26.11.2020ம் தேதி இறந்து விட்டார் என்றும் சாட்சியமளித்துள்ளார். ம.சா.2 இறந்துபோன பிரபுவின் நண்பர், அவர் விபத்தின் போது இறந்து போன பிரபுவுடன் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்துள்ளார், அவரும் மனுச் சங்கதிகளை ஒத்துரைத்தே சாட்சியம் அளித்துள்ளார். ம.சா.2-ன் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.7 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7) இந்நிலையில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் தரப்பு சங்கதிகளை மறுத்து எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்காமல் தோன்றாத் தரப்பினர்களாகக் கருதப்பட்டுள்ளனர். இந்நிலையில் ம.சா.1 மற்றும் ம.சா.2 ன் சாட்சியங்கள் அவர்களது சாட்சியத்தில் தெள்ளத் தெளிவாக 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரான 2ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவே விபத்திற்கு காரணம் என்று உறுதி செய்துள்ளனர். மேலும் இந்த விபத்து குறித்து 2ம் எதிர்மனுதாரர் மீது நாகமலை புதுக்கோட்டை காவல் நிலையத்தில் கு.எண்—922/2020 ல், குற்றப் பிரிவுகள் 279, 337 மற்றும் 304(A) இ.த.சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரான 2ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவே காரணம் என இந்த பிரச்சினைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

8) <u>**பிரச்சினை எண் 2 க்கான தீர்வு—**</u>

விபத்து 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரான 2ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவினால் ஏற்பட்டுள்ளது என பிரச்சினை எண்.1 க்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு பாலிசி விபத்தின்போது ஊர்ஜிதத்தில் இல்லை. 2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரின் பணியாளர். இவர்களுக்குள் எஜமானர் —பணியாளர் என்ற வகைப்பாடு உள்ளது. எனவே Vicarious liability என்ற அடிப்படையில் தனது பணியாளர் 2ம் எதிர்மனுதாரர் செய்த தவறுகைக்காக 1ம் எதிர்மனுதாரர்

வாகனத்தின் உரிமையாளர் என்ற அடிப்படையில் மனுதாரர்களுக்கு இந்த விபத்தினால் ஏற்பட்ட நஷ்ட ஈட்டினை கொடுக்க கடமைப்பட்டவர் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

9) **பிரச்சனை எண்–3–க்கான தீர்வு –**

சம்பவ காலத்தில் இறந்து போன பிரபு என்பவருக்கு வயது 32 எனவும், அவர் கூலி வேலை பார்த்து நாள் ஒன்றுக்கு ரூ.700/– சம்பாதித்து வந்ததாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இறந்த நபரின் வயது என்ன என்பது பற்றி காண்கையில், மனுதாரர்கள் தரப்பில் இறந்துபோனவரின் வயது 32 என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகையில் விபத்தின்போது இறந்துபோன பிரபு என்பவரின் வயது 32 என இத்தீர்ப்பாயம் நிர்ணயம் செய்கிறது.

10) மனுதாரர்கள் பிரபு என்பவரின் வாரிசுதாரர்கள் என்பதை எடுத்துரைக்க ம.சா.ஆ.4 மற்றும் ம.சா.ஆ.8 வாரிசு சான்றிதழ் குறியீடு செய்யப்பட்டுள்ளது. முதலில் மனுதாரர்கள் தரப்பில் இறந்துபோன பிரபுவின் வாரிசு சான்றாக ம.சா.ஆ.4 தாக்கல் செய்யப்பட்டிருந்தது. மேற்படி ம.சா.ஆ.4 யைப் பரிசீலித்துப் பார்க்கையில் இறந்துபோன பிரபுவின் இரண்டாவது குழந்தை வாரிசாக சேர்க்கப்படாததால், சரியான வாரிசு சான்றிதழை பெற்று மனுவில் தாக்கல் செய்யும்படி அறிவுறுத்தப்பட்டதில் பின்னர் ம.சா.ஆ.8 வாரிசு சான்றிதழ் பெற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதை காணமுடிகிறது. ம.சா.ஆ.8 பரிசீலனை செய்கையில் 1 முதல் 5 வரையான மனுதாரர்கள் இறந்துபோன பிரபு

என்பவரின் வாரிசுகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, 1 முதல் 5 வரையான மனுதாரர்கள் இறந்துபோன பிரபு என்பவரின் வாரிசுகள்தான் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

11) இறந்துபோன பிரபு கொத்தனராக வேலை செய்து தினம் ரூ.700/– சம்பாதிப்பதாக மனுவில் கூறியுள்ள மனுதாரர்கள் அதனை நிரூபிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை, இந்நிலையில் விபத்து நடைபெற்ற வருடம் மற்றும் இறந்த பிரபுவின் வயதினையும், இக்கால வாழ்வாதாரத்தையும், விலைவாசியையும் கவனத்தில்கொண்டு இறந்துபோன பிரபுவின் மாத வருமானமாக ரூ.8,000/–(Notional Income) எடுத்துக்கொள்ளலாம் என இந்நீதிமன்றம் நிர்ணயம் செய்கிறது.

12) பிரபு என்பவரின் வயது 32 என்பதையும், அவரது மாத வருமானம் ரூ.8,000/– என நிர்ணயித்துள்ளதை கருத்தில்கொண்டும், 2017 (2) TNMAC 609(SC) – National Insurance Company Limited – VS– Pranay Sethi and others – என்ற வழக்கில் வழங்கப்பட்ட முன்தீர்ப்பின் அடிப்படையில் பிரபுவின் எதிர்கால ஊதியத்தை நிர்ணயம் செய்ய 40% கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதன் அடிப்படையில் ரூ.8,000/– + ரூ3,200/– = ரூ.11,200/– பிரபு என்பவரின் மாத ஊதியமாக இத்தீர்ப்பாயம் நிர்ணயம் செய்கிறது. இந்நிலையில் ரூ.11,200/– பிரபு என்பவரின் மாத ஊதியமாக எடுத்துக்கொண்டு 2009 (2) TNMAC – பக்கம் – 1 (SC) – Smt. Sarla Verma and others – VS– Delhi Transport Corporation and

others – என்ற வழக்கில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பின் அடிப்படையில் பிரபு இறக்கும்போது அவருக்கு 1 முதல் 5 மனுதார்கள் இருப்பதை கருத்தில்கொண்டு அவருடைய வருமானத்தில், அவரது சொந்த செலவிற்காக 1/4 பாகம் எடுத்தது போக மீதி 3/4 பாகத்தை தன்னுடைய குடும்பத்திற்கு கொடுத்திருப்பார் என்று கருதி, அதனடிப்படையில் (ரூ.11,200 – ரூ.2,800/– ) = ரூ.8,400/–ஐ பிரபு தன்னுடைய குடும்பத்திற்கு கொடுத்திருப்பார். சரளா வர்மா வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் பிரபு என்பவரின் வயது 32 என்பதை கருத்தில் கொண்டு 16 பெருக்கல் குறியீட்டை இந்த தீர்ப்பாயம் கணக்கில் கொண்டு, வருமான நஷ்ட ஈட்டை நிர்ணயம் செய்கிறது. அந்த அடிப்படையில் (ரூ.8,400 X 12 X 16 ) = ரூ.16,12,800/– வருமான இழப்பீடாக மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது. 1ம் மனுதாரர் தான் இழந்த மணவாழ்க்கை இழப்பிற்காக ரூ.40,000/–மும், 2,3 மனுதாரர்கள் தாங்கள் இழந்த தங்களது தந்தை அன்பு மற்றும் பாசத்திற்கும் 4,5 மனுதாரர்கள் தாங்கள் இழந்த தங்களது மகனின் அன்பு மற்றும் பாசத்திற்காக தலா ரூ.10,000/ வீதம் ரூ.40,000/மும், ஈமக்கிரியை செலவிற்கு ரூ.15,000/–மும், ஆக மொத்தம் ரூ.17,07,800/– இழப்பீடாக மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில், மனுதாரர்களுக்கு நஷ்ட ஈடு கிடைக்கத்தக்கது.

| வரிசை எண். | விவரங்கள் | தொகை |
|---|---|---|
| 1. | வருமான இழப்பு | ரூ. 16,12,800/– |
| 2. | 1ம் மனுதாரரின் மணவாழ்க்கை இழப்பிற்காக | ரூ. 40,000/– |
| 3. | அன்பு மற்றும் பாசத்திற்காக 2 முதல் 5 மனுதாரர்களுக்கு தலா ரூ.10,000/– வீதம் | ரூ. 40,000/– |
| 4. | ஈமக்கிரியை செலவிற்காக | ரூ. 15,000/– |
| | மொத்தம் | ரூ. 17,07,800/– |

மேற்கண்ட தொகையை 1ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு இம்மனு தாக்கல் செய்யப்பட்ட தேதியான 04.04.2022 தேதி முதல் தொகை முழுவதும் செலுத்தி முடிக்கும் வரை 7.5% வட்டியுடன் செலுத்தவேண்டுமென்று இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவாக,**

1. இம்மனு செலவுத்தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்பட்டு,

2. 1ம் எதிர்மனுதாரர், மனுதாரர்களுக்கு நஷ்ட ஈடாக ரூ. 17,07,800/–ஐ இம்மனு தாக்கல் செய்யப்பட்ட தேதியான 04.04.2022 முதல் உத்தரவாணைத் தொகை முழுவதும் செலுத்தப்படும் வரை 7.5 சதவீத வட்டி மற்றும் செலவு தொகை ரூ. **40,677.50** வுடன் 2 மாத காலத்திற்குள் ஸ்டேட் பேங்ப் ஆப் இந்தியா, திண்டுக்கல் மெயின் கிளையில் உள்ள இந்நீதிமன்ற வங்கிக் கணக்கான No.36101162495 (IFSC Code No.SBIN0000835) என்ற எண்ணுள்ள வங்கிக் கணக்கில் வைப்பீடு செய்ய வேண்டு மென்றும் ,

3. 1ம் எதிர்மனுதாரர் செலுத்தும் மேற்படி தொகையில் 1ம் மனுதாரருக்கு ரூ.4,07,800/-மும் 2 மற்றும் 3ம் இளவர் மனுதாரர்களுக்கு தலா ரூ.5,00,000/-மும், 4 மற்றும் 5ம் மனுதாரர்களுக்கு தலா ரூ.1,50,000/- கிடைக்கக் கூடியதென்றும்,

4. 1ம் எதிர்மனுதாரர் தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்த பின்னர், மேற்படி 1, 4 மற்றும் 5ம் மனுதாரர்கள் தங்களது பாக தொகை முழுவதையும் விகிதாச்சார வட்டி மற்றும் செலவு தொகையுடன் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. 2 மற்றும் 3ம் இளவர் மனுதாரர்களின் பாகத் தொகை தலா ரூ.5,00,000/-ஐ விகிதாச்சார வட்டி மற்றும் செலவு தொகையுடன் இளவர் மனுதாரர்கள் மேஜராகும்வரை ஏதாவது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் வைப்பீடு செய்யவேண்டுமென்றும் அந்த வைப்பீட்டிலிருந்து கிடைக்கும் வட்டியை இளவர் மனுதாரர்களின் பெயரில் உள்ள வங்கி கணக்கில் வரவு செய்ய உத்தரவிடப்படுகிறது. (As per instruction in Circular Roc No. 53940A/2021 P.Dis No. 17/2024 dated 22.2.2024 of Hon'ble High Court, Madras)

5. வழக்கறிஞர் கட்டணம் ரூ.24,078 /-.

6, பாக்கி நீதிமன்றக் கட்டணம் ரூ.16,078/-ஐ 30 நாட்களுக்குள் மனுதாரர்கள் செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு செலுத்தத் தவறும் பட்சத்தில் செலுத்தத் தவறிய காலத்திற்கு உரிய வட்டியை இழப்பதோடு, செலுத்தும்வரை இவ்வுத்தரவு நிறைவேற்றுதற்குரியது அல்ல என்றும் உத்தரவிடப்படுகிறது.

7. 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

8. மாண்புமிகு சென்னை உயர்நீதின்ற முன் தீர்ப்பு வழக்கு எண் Tr.CMP.Nos.264 to 281 of 2021 M/s.Cholamandalam Ms.General Insurance Company Ltd /vs/ Mr. Ayyanar and others என்ற முன்தீர்ப்பில் பிறப்பித்த உத்தரவுபடி

நிறைவேற்றாணையின் விசயங்கள் அனைத்தும் இந்த உத்தரவில் சேர்க்கப்பட்டுவிட்டதால் தனியாக நிறைவேற்றாண பிறப்பிக்கப்படவேண்டிய அவசியம் எழவில்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரி பார்க்கப்பட்டு 2024–ம் ஆண்டு ஜீலைத் திங்கள் 16–ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.07.23 13:23:31 +0530

**தீர்ப்பாயர்/**
**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்.**

**இணைப்பு–**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் –**

| | |
|---|---|
| ம.சா.1 | – திருமதி. மல்லிகா |
| ம.சா.2 | – திரு. ஜனகர் |

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் –**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 23.11.2020 | முதல் தகவல் அறிக்கையின் நகல் |
| ம.சா.ஆ.2 | -- | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை நகல் |
| ம.சா.ஆ.3 | 22.12.2020 | பிரபு என்பவரின் இறப்பு சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ.4 | 11.02.2021 | பிரபு என்பவரின் வாரிசு சான்றிதழ் உண்மை நகல் |
| ம.சா.ஆ.5 | 26.11.2020 | பிரபு என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை நகல் |
| ம.சா.ஆ.6 | -- | மனுதாரர்களின் ஆதார் அட்டை நகல் |
| ம.சா.ஆ.7 | 02.07.2017 | ம.சா.2 –ன் ஆதார் அட்டை நகல் |
| ம.சா.ஆ.8 | --- | பிரபு என்பவரின் மனுதாரர்களின் வாரிசு சான்றிதழ் நகல் |

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றவாணம் – இல்லை.

## <u>செலவுத் தொகை விவரம்</u>

| வ. எண். | செலவுத் தொகை விபரம் | மனுதாரருக்கு ரூ. பை. |
|---|---|---|
| 1. | மனுவிற்கான வில்லை | 16,450.50 |
| 2. | வக்காலத்திற்கான வில்லை | 10.00 |
| 4. | கட்டளை சேர்ப்பிக்க | 69.00 |
| 5. | வழக்கறிஞர் கட்டணம் | 24,078.00 |
| 6. | ஆதரவு ஜாப்தா ஸ்டாம்பு | 45.00 |
| 7. | வாதுரைக் கட்டணம் | 25.00 |
| | மொத்தம் | **40,677.50** |

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.07.23 13:23:38 +0530

**தீர்ப்பாயர்/முதன்மை மாவட்ட நீதிபதி,**
திண்டுக்கல்.

முதன்மை  மாவட்ட நீதிமன்றம்,
திண்டுக்கல்.

**மோ.வா.வி.இ.கோ.மனு**
**எண். 524/2022**

அசல் /நகல் உத்தரவு
நாள் – 16.7.2024